கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 209/2015 மற்றும் அ.வ.எண்.210/2015

நாள். 08.11.2023 வா.சா.1 – திரு.ஜெயகுமார்

த/பெ - திரு.வேலாயுதபெருமாள்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) அ.வ.எண்.209/2015 ல் நீங்கள் வாதி என்றால் அ.வ.எண்.209/2015 ல் என் மகன் வாதி, அ.வ.எண்.210/2015 ல் நான் வாதி. என் மகனுக்கு பவர் ஏஜெண்ட் நிலையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் பி.எஸ்.சி-யில் கிரிமினாலஜி படித்துள்ளேன். இரண்டு வழக்கிற்குமே நீங்கள் தான் தாக்கல் செய்ய விபரங்கள் கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். முதல்விசாரணை சாட்சிய அபிடவிட் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். அதில் பாரா 3 லிருந்து பாரா 9 வரை கூறப்பட்ட சங்கதிகள் உங்களுடைய இரண்டு வழக்குரையிலும் கூறப்படவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் தற்போது தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களின் விபரம் நீங்கள் தாக்கல் செய்துள்ள பிராதில் கூறவில்லை என்றால் சரிதான். பிராதில் சொல்லப்படாத சங்கதிகளையும் பிராதில் குறிப்பிடாத ஆவணங்களையும் சாட்சியமாக சொல்லமுடியாது என்று சொன்னால் தேவை ஏற்படவில்லை, அதனால் நான் சொல்லவில்லை.

2) நீங்கள் சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு வில்லங்க சான்று, வருவாய்துறை ஆவணங்களை பார்வையிட்டீர்களா என்றால் பார்த்தேன். நீங்கள்

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2023.11.08 13:55:30 +0530

அந்த வில்லங்க சான்றிதழையும், வருவாய்துறை ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. வில்லங்க சான்றிதழ் 1940 முதல் வழக்கு தாக்கல் செய்யும் வரை வில்லங்க சான்று பார்த்தேன். வருவாய் துறை ஆவணங்களில் பட்டா எண்.2 ல் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி கோவிலில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் ஏற்பட்டுள்ளது, தவறுதலாக ஏற்பட்டுள்ளது. தவறுதலாக ஏற்பட்டுள்ளது என உங்களுக்கு எப்போது தெரிந்தது என்றால் வழக்கு தாக்ல் செய்த காலமான 2015 ல் தெரியும்.

3) யு.டி.ஆர். திட்டத்திற்கு முன்பே கோவில் பெயரில் பட்டா உள்ளது என்றால் நான் அதை பார்க்கவில்லை. அ பதிவேடு மற்றும் அடங்கல் கணக்கும் கோவில் பெயரில் தான் உள்ளது சரிதான். வா.சா.ஆ.14 கோவில் பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த கோவில் பெயரில் தான் தீர்வையும் உள்ளது என்றால் சரிதான். நான் கோவில் பெயரில் தீர்வை செலுத்துகிறேன். நீங்கள் கிரையம் வாங்கி எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால் நான் 2007 லும், 2010 லும் கிரையம் வாங்கினேன். கிரையம் வாங்கிய பிறகு பட்டாவை உங்கள் பெயரில் மாற்றவும், தீர்வையை உங்கள் பெயரில் மாற்றவும் நடவடிக்கை எடுத்தீர்களா என்றால் நடவடிக்கை எடுக்கவில்லை.

4) 4 ம் பிரதிவாதியை வழக்கில் சேர்த்துள்ளீர்கள் என்றால் சரிதான். அவர் அரசு

J ANNS RAJA

Digitally signed by J ANNS RAJA
Date: 2023.11.08 13:55:36 +0530

ஊழியர் என்றால் சரிதான். அரசு ஊழியர் மீது வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்றால் பிரிவு 80 படி அறிவிப்பு அனுப்ப வேண்டும் என்று தெரியுமா என்றால் தெரியும், அறிவிப்பு அனுப்பி கட்சி சேர்த்து விட்டேன். 4ம் பிரதிவாதிக்கு முன் அறிவிப்பு அனுபப்பவில்லை என்றும் அதனால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் குளத்துஜயர் பெயரில் உள்ளது , அந்த குளத்துஜயரை நிங்கள் பார்த்துள்ளீர்களா என்றால் பார்க்கவில்லை, அவர்கள் தகப்பனார் பெயரை பார்த்துள்ளீர்களா என்றால் பார்க்கவில்லை, அவர்களுடைய வாரிசுகள் விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

5) குளத்துஜயர் நிறைவேற்று மனு தாக்கல் செய்து வாழ்விப்பு பரிகாரம் கேட்கவில்லை என்றால் இல்லை, வாழ்விப்பு பெற்றுள்ளார். எந்த நீதிமன்றத்தில் எந்த நிறைவேற்று மனுவில் வாழ்விப்பு பெற்றார் என்று ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். குளத்துஜயர் பண வழக்கில் தான் வழக்கில் கண்ட சொத்துடன் சேர்த்து பிற சொத்துகளையும் ஏல கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். ரூ.4,500/-க்கு எழுதிக்கொடுத்த ஜாமீனுக்காக வேண்டி வழக்கு சொத்தும் அதனுடன் சேர்த்த மற்ற நான்கு சொத்துக்களும் ஏலம் பெறப்பட்டது என்றால் சரிதான். மற்ற 4 சொத்துக்களும் வழக்கு சொத்தின் பக்கத்தில் உள்ள சொத்துக்கள் என்றால் தெரியாது. ஜாமீன் கொடுக்கும் போது ஏலச்சான்றில் குறிப்பிட்ட கோவிலுக்கு பாத்தியப்பட்ட 1வது அயிட்ட சொத்தையும் சேர்த்து கொடுத்ததால் ஏலச்சான்று

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2023.11.08 13:55:41 +0530

ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6) குளத்துஐயர் பெயரில் பட்டா, தீர்வை ஏதும் ஏற்படவில்லை என்றால் தெரியாது. கோவில் சொத்தான சர்வே எண்.1197 1 ஏக்கர் 84 செண்டை பொறுத்து வா.சா.ஆ.1 ஆன ஏலச்சான்று ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஜானகியம்மாளை உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஜானகியம்மாள் சொத்தை அனுபவித்ததற்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். ஜானகியம்மாள் கிரையம் வாங்கியதாக வா.சா.ஆ.2 கிரய ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்கள் அதனை படித்து பார்த்துள்ளீர்களா என்றால் படித்து பார்த்துள்ளேன். அதில் முதல் பக்கத்தில் வள்ளியூர் ஸ்ரீசுப்பிரமணியசுவாமி கோவில் மாதாந்திர சுக்கிரவார வில்வ அர்ச்சனை கட்டளைதாரர் பாத்தியமாய் மேற்படி தர்மத்தை நடத்த வேண்டும் என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7) தபசில் சொத்து ஸ்ரீசுப்பிரமணியசுவாமி கோவில் கட்டளைக்கு உரியது என்றால் சரியல்ல. நீங்கள் கிரையம் வாங்கும் போது சொத்தை பொறுத்து கட்டளை இருப்பது தெரியும் என்றால் தெரியாது, பின்னாளில் தான் தெரியவந்தது. 2008ம் வருடம் வழக்கு சொத்தை பொறுத்து ஒரு கட்டளை இருப்பது தெரியவந்தது என்றால் சரிதான். ஸ்ரீசுப்பிரமணியசுவாமி கோவில் இந்து அறநிலையத்துறைக்கு பாத்தியப்பட்ட அரசு கோவில் என்றால் சரிதான். கோவில் நிர்வாகத்திடம் போய் சொத்து

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.11.08 13:55:46 +0530

சம்பந்தமான ஆவணம் இருக்கிறதா என்று கேட்டீர்களா என்றால் கேட்டேன், கோவில் பெயரில் எந்த ஆவணமும் இல்லை என்று கூறினார்கள். கோவில் பதிவேட்டில் சர்வே எண்.1197 1 ஏக்கர் 84 செண்டு சுப்பிரமணிய சுவாமி மாதாந்திர சுக்கிரவார வில்வஅர்ச்சனை கட்டளை சொத்து என குறிப்பிட்டுள்ளது என்றால் தெரியும்.

8) கோவில் அறக்கட்டளை சொத்து என்பதால் தான் கோவில் பெயரில் பட்டாவும், தீர்வையும் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணமான 30.10.1942 ல் ஒரு கிரைய பத்திரம் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். அப்பத்திரத்தில் குறிப்பிட்டுளள் சுப்பாராயலு போற்றி பற்றி தெரியுமா என்றால் தெரியாது. அவர் எப்போது இறந்தார் என்றும், அவருடைய வாரிசுகள் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.3 லும், வா.சா.ஆ.2 ல் குறிப்பிட்ப்பட்டுள்ள கட்டளை விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுப்பாராயலு போற்றி சொத்தை எப்படி அனுபவித்து வந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. சுப்பாராயலுபோற்றி சொத்தை எப்படி அனுபவித்து வந்தார் என்று பிராதிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

9) வா.சா. ஆ 4 ஆவணமான 09.04.1963 ஆவணத்தை பற்றி தெரியுமா என்றால் சத்தியபாமாவும், மைனர் முருகனும் குப்பாமூப்பனுக்கு கிரையம் கொடுத்ததாக

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.11.08 13:55:51 +0530

உள்ளது. சத்தியபாமாவையும், மைனர் முருகனையும், குப்பாமூப்பனையும் பார்த்ததில்லை என்றால் குப்பாமூப்பனை தெரியும், குப்பாமூப்பனின் பெயரில் பட்டா, தீர்வை ரசீது உண்டா என்றால் இல்லை. வா.சா.ஆ.4 ல் 1997 1 ஏக்கர் 84 செண்டில் வடபாதியில் கீழ் ஓரம் செண்டு 2 நீக்கி நின்ற செண்டு 1 ஏக்கர் 82 செண்டில் வடபாதி செண்டு 91 என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. 2 செண்ட் எதற்காக நீக்கினார்கள் என்றால் கிணறு இருந்தது. கிணறு யார் பகுதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் பொதுவாக விடப்பட்டுள்ளது, ஆளுக்கு பாதியாக குப்பாமூப்பன் 2 மகன்க்ளுக்கு ஒதுக்கப்பட்டது. அதற்கு ஏதாவது ஆவணங்கள் உள்ளதா என்றால் அவர்கள வாய்மொழியாக பிரித்து கொண்டார்கள். எந்த வருடம் வாய்மொழியாக பிரித்துகொண்டார்கள் என்றால் தெரியாது. வாய்மொழி பாகம் எற்பட்ட போது நான் உடன் இல்லை. குப்பாமுப்பனின் வாரிசு சான்றிதழ் என் கைவசம் உள்ளது. அவர் வாரிசு சான்றிதழ் பார்த்தால் குப்பாமூப்பன் எப்போது இறந்தார், அவர் வாரிசுகள் யார்யார் என்று தெரியும் என்றால் சரிதான்.

10) குப்பாமூப்பன் எப்போது இறந்தார் என்றால் எனக்கு தெரியாது.அவருடைய வாரிசு சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். குப்பாமூப்பன் வாங்கிய கிரையபத்திரத்திலும் ஸ்ரீசுப்பிரமணியசுவாமி கோவிலுக்கு பாத்தியப்பட்ட மேற்படி கட்டளை விபரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 29.03.1968 ல் கிரையம் பத்திரத்தையும் குப்பாமூப்பன் கிரயம் பெற்றுள்ளார். அந்த

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.11.08 13:55:58 +0530

பத்திரத்திலும் முருகன் கோவிலுக்குள்ள கட்டளை விபரம் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

11) ராமபாண்டி என்பவரை தெரியுமா என்றால் தெரியும், அவர் நிலபுரோக்கரா என்றால் தெரியாது. வா.சா.ஆ.6 மூலம் 02.03.2007 ல் ராமபாண்டி ஒரு கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண்.1197 ல் 1 ஏக்கர் 84 ல் மேற்கடைய 1 ஏக்கர் 12 செண்டில் தென்பாதி செண்ட் 56 ல் செண்டு 18.67 நீங்கலாக 37.33 செண்டு கிரையம் பெற்றதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிரைய காலத்திலேயே உங்களுக்கு அந்த கிரைய விபரம் தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள ஸ்ரீசுப்பிரமணியசுவாமி கோவிலுக்கு பாத்திய்பபட்ட அறக்கட்டளை விபரம் கூறப்படவில்லை என்றால் சரிதான். 1968 க்கு பின்பு 2007 ல் தான் ராமபாண்டி வா.சா.ஆ.6 பத்திரம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். ராமபாண்டி வா.சா.ஆ.6 மூலம் கிரையம் பெற்ற சொத்தை தனித்து உட்பிரிவு செய்து அனுபவிக்கவில்லை என்றால் சரிதான். ராமபாண்டி பெயரில் பட்டா, தீர்வை ரசீது எதுவும் ஏற்படவில்லை என்றால் தெரியாது. வா.சா.ஆ.6 கிரையம் பெறும்போது நீங்கள் பங்கு கொண்டீர்களா என்றால் இல்லை.

12) வா.சா.ஆ.6 எழுதிய அதே தேதியில் 02.03.2007 ல் ராமபாண்டி மனைவி பெயரில் ஒரு கிரையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது அந்தபத்திரத்தில் ராமபாண்டி பவர் ஏஜெண்டாக

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2023.11.08 13:56:04 +0530

இருந்து தன்னுடைய மனைவி சுபாலெட்சுமி பெயரில் மேற்படி ஆவணத்தை எழுதி கொடுத்தார் , அதில் 1961 முன் ஆவணங்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் உள்ள கட்டளை விபரங்களை வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 ஆவணங்களில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ல் 4 வது பக்கத்தில் குப்பாமூப்பன் வாரிசுகள் வாக்கால் பாகம் செய்து கொண்டார்கள் என்று கூறப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். வாக்கால் பாகம் செய்து கொண்ட வருடம் எப்போது ஏற்படுத்தி கொண்டார்கள் என்ற கூறமுடியுமா என்றால் தெரியாது. அந்த வாக்கால் ஏற்படும் போது யார்யார் இருந்தார்கள் என்றும், யார்யாருக்கு எந்த பாகம் ஒதுக்கப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. ராமபாண்டி வா.சா.ஆ.6 மூலம் தாவா சொத்தின் தென்புறம் பிரிவின்றி 33 சென்டும் அதே தேதியில் வா.சா.ஆ.7 மூலம் தனது மனைவி பெயரில் வடபுறம் 56 சென்டும் கிரையம் பெற்றதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

13) வா.சா.ஆ.8 மூலம் 15.03.2007 ல் ராமபாண்டி மனைவி சுபாலெட்சுமி பெயரில் தென்புறம் 56 சென்டு கிரையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ல் உள்ள சந்திரசேகரன், வேல்முருகன், சுபாலெட்சுமி , தவா சொத்தை எப்படி அனுபவித்தார்கள் என்றால் வடக்கடைய அனுபவித்தார்கள். அவர்கள் பெயரிலும் பட்டா, தீர்வை ரசீது ஏற்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6,வா.சா.ஆ 7, வா.சா.ஆ.8 ஆவணங்களில் முருகன் கோவில் கட்டளை

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2023.11.08 13:56:10 +0530

விபரம் கூறப்படவில்லை. அந்த கட்டளை விபரத்தை பத்திரங்களில் போட சொன்னீர்களா என்றால் அவர்கள் விருப்பம் என்று சொன்னதால் சொல்லவில்லை.

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.11.08 13:56:15 +0530